சார்பு நீதிமன்றம், குளித்தலை
MCOP.NO. **186 / 2018**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.1 வது** சாட்சி இருக்கை எழுத்தர் நிலை – II திருமதி.V.தனம் அவர்களால் 44/1969 பிரிவின்படி **18.06.2024** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: மலர்விழி | கிராமம் : |
| த/பெ: | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது முசிறி வட்டார போக்கவரத்து அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணியற்றி வருகிறேன். இவ்வழக்கில் 01.03.2018 ம் தேதி மாலை 06.30 மணியளவில் குளித்தலை பெரிய பாலம் அருகே விபத்து ஏற்படுத்தியதாக கூறப்படும் TN 48 V 1365 என்ற பதிவெண் கொண்ட இண்டிகா காரை ஓட்டி வந்ததாக சொல்லப்படும் முசிறி, பார்வதிபுரம் 3 வது புறம் வசிக்கும் முத்துக்கிருஷ்ணன் மகன் செல்வம் என்பவர் முசிறி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளாரா என்பது குறித்து ஆவணங்களுடன் ஆஜராகி சாட்சியம் அளிக்குமாறு பெறப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜராகியுள்ளேன். எங்கள் அலுவலக கோப்புகளை பார்த்ததில் மேற்கண்ட முகவரில் வசிப்பதாக சொல்லப்படும் செல்வம் என்பவருக்கு எங்கள் அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் எதுவும் வழங்கப்படவில்லை என்பது தெரியவந்தது. அது குறித்து எங்கள் அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய கடிதம் தாக்கல் செய்கிறேன். அது சாட்சி சாண்றாவணம் 3.

<u>குறுக்கு விசாரணை</u>

எங்கள் அலுவலகம் 2013 ம் வருடத்தில் இருந்து தான் இயங்கி வருகிறது என்றால் சரிதான். அதற்கு முன்பாக குளித்தலை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தான் எங்கள் பகுதியும் சேர்ந்திருந்தது. குளித்தலை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மேற்படி செல்வம் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளாரா என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் பிறந்த தேதி மற்றும் ஓட்டுநர் உரிம எண் இருந்தால் குளித்தலை அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் எடுத்தால் கூட எங்கள் அலுவலகத்தில் பார்த்துவிடலாம். மேற்படி நபரின் முகவரியை வைத்து தான் எங்கள் அலுவலகத்தில் வைத்து தான் தேடிப்பார்த்தோம். தற்காலிக முகவரியை வைத்துக்கூட ஓட்டுநர் உரிமம் பெறலாம் என்றால் தற்போது பெற முடியாது, சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக பெறலாம். செல்வம் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் எங்கள் அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்டுள்ளது என்றும்

ஆவணங்களை முறையாக பார்க்காமல் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

ஒம்/- மலர்விழி

ஒம்/ K. இன்ப கார்த்திக்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.